**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.625/2026**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw2/Pw2 |
| Name | : நாகராஜ் |
| Father/Husband's Name | : கணேசன் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 39 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16.07.2026.

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மதுவிலக்கு அமலாக்க பிரிவு செங்கல்பட்டு காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியாற்றுகிறேன். கடந்த 07.04.2023 ம் தேதி நான் செங்கல்பட்டு தாலுகா காவல் நிலையத்தில் காவலராக பணியில் இருந்த போது கார்த்திகேயன் சிறப்பு உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் மதியம் 12.00 மணியளவில சிறப்பு உதவி ஆய்வாளர் கார்த்திகேயன் தலைமையில் நானும் என்னுடன் கங்காதரன் காவலர் ஆகியோர்கள் மேலமையூர் ஏரிக்கரை அருகே மதியம் 12.15 மணியளவில் சென்று கண்காணித்து கொண்டிருக்கும்போது அங்கிருந்த தகவலாளி அடையாளம் காட்ட ஆஜர் எதிரி சந்தோஷ் என்பவரை விசாரித்த போது அவர் சட்டை பாக்கெட்டில் 100 கி கஞ்சா வைத்திருந்தார்.

2. அவர் பாக்கெட்டில் கஞ்சாவை எடுத்து எரித்த போது நெடியுடன் கூடிய வாடை வந்ததால் கஞ்சா என்று உறுதி செய்து அதை எடை போட்டு பார்த்த போது 100 கி கஞ்சா இருந்தது. மதியம் 12.45 மணியளவில் எதிரியை கைது செய்து, சிறப்பு உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து 100 கி கஞ்சாவை கைப்பற்றினார். அதில் நானும் கங்காதரன் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அதசா.ஆ.1 கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். பிறகு எதிரியை கைது செய்து எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட பொருளுடன் காவல் நிலையம் வந்தோம். கைப்பற்றப்பட்ட பொருளை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் செங்கல்பட்டு தாலுகா காவல் நிலையத்தில் 2023–2025 வருடம் வேலை செய்தேன். அங்கு நான்கு திசைகளும் எனக்கு தெரியும். கைப்பற்றப்படதாக சொல்லப்படும் கஞ்சா எவ்வாறு இருந்தது என்றால் வெள்ளை நிற கவரில் பச்சை நிறத்தில் விதைகளும் இருந்தது. அது கஞ்சா என்று எவ்வாறு உறுதி செய்தோம் என்றால் அதில் சிறிதளவு எடுத்து எரித்து பார்த்து உறுதி செய்தோம். 1 கி அளவிற்கு எடுத்து பார்த்தோம். 100 கி கஞ்சா கைப்பற்றப்பட்டது. நான் மகசரில் கையொப்பம் செய்யும் போது அங்கு பொது மக்கள் யாரும் இல்லை. சம்பவ இடத்தில் ரோடு இல்லை. நான் கையெழுத்து போட்ட ஆவணம் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. 12.45 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்யப்பட்டது. உதவி ஆய்வாளர் சென்று தட்டச்சு செய்து கைப்பற்றுதல் மகசர் எடுத்து வந்தார். இதைப்பற்றி உதவி ஆய்வாளர் விசாரித்த போது சொல்லி இருக்கிறேனா என்றால் சொல்லி இருக்கிறேன்.

2. எதிரியை பிடிப்பதற்கு நானும் கங்காதரனும் தான் சென்றோம். கார்த்திகேயன் சிறப்பு உதவி ஆய்வாளரின் தகவலின் பேரில் சென்றோம். மேல்

அதிகாரியின் உத்தரவின் பேரில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், வழக்கிற்கு தேவையான அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.625/2026**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Pw3 ( Additional Witness) |
| Name | : வெங்கடேசன் |
| Father/Husband's Name | : வீரபத்திரன் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 58 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16.07.2026.

Accused present.

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது செங்கல்பட்டு தாலுகா காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றுகிறேன். செங்கல்பட்டு தாலுகா காவல் நிலையத்தில் பணியாற்றிய கார்த்திகேயன் உடன் பணியாற்றியதால் அவரது விசாரணை முறை நன்கு தெரியும் என்ற முறையில் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 07.04.2023ம் தேதி கார்த்திகேயன் சிறப்பு உதவி ஆய்வாளராக செங்பல்பட்டு தாலுகா காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது காலை 11.00 மணியளவில் அவருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அவரும் அவருடன் கங்காதரன் மற்றும் நாகராஜ் காவலர்கள் மதியம் 12.00 மணியளவில் மேலமையூர் ஏரிக்கரை அருகே சென்று கண்காணித்து கொண்டிருக்கும்போது அங்கிருந்த தகவலாளி அடையாளம் காட்ட ஆஜர் எதிரி சந்தோஷ் த/பெ ஜான்தேவதாஸ் அவர்களை பார்த்த உடன் ஓட ஆரம்பித்த

அவரை மடக்கி பிடித்து விசாரித்த போது முன்னுக்கு பின் முரணாக பதில் சொன்னதால் அவரை விசாரித்த போது அவரது சட்டை பாக்கெட்டில் இருந்து சிறு பொட்டலம் எடுத்து கொடுத்தார். அதில் கஞ்சா இருந்தது. அதை எடை போட்டு பார்த்த போது 100 கி கஞ்சா இருந்தது.

2. 12.30 மணிக்கு அவரை கைது செய்து, 12.45 மணிக்க கஞ்சாவை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து மேற்சொன்ன காவலர்கள் முன்னிலையில் கைப்பற்றினார். அவர்களிடம் கையெழுத்து பெற்றார். பின் எதிரியை கைது செய்து கைப்பற்றப்பட்ட பொருள் மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து எதிரி மீது குற்ற எண் 197/2023 பிரிவுகள் 8(c),20(b)(ii)(A) NDPS Act வழக்கு பதிவு செய்யப்பட்டது. **அந்த முதல் தகவல் அறிக்கை அதசா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எதிரியை இருநபர் பிணையில் நிலைய ஜாமீனில் விட்டார். பிறகு கைப்பற்றபட்ட பொருளை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். **அந்த படிவம் 95 அதசா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அவருடன் வந்த காவலர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பிறகு அவரது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. ரகசிய தகவல் 11.00 மணிக்கு கிடைத்தது. அதைப்பற்றி முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை. முதல் தகவல் அறிக்கையில் பொட்டலம் கட்டி வைத்திருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இறுதி அறிக்கையில் வெள்ளை நிற கவரில் இலைகள் மற்றும் விதைகளுடன் கூடிய கஞ்சா என்று சொல்லப்பட்டுள்ளது. எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கஞ்சாவை வீடியோ அல்லது புகைப்படம் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. கஞ்சா என்று உறுதி செய்வதற்கு பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டதா என்றால் இல்லை.

2. எதிரியை கைது செய்வதற்கு மூன்று காவல் துறையினர் சென்றோம். கைப்பற்றுதல் மகசர் நீதிமன்றத்தில் எந்த தேதியில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் தேதி சரியாக ஞாபகம் இல்லை. முதல் தகவல் அறிக்கை 08.04.2023 ம் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. எதிரியை இரண்டு நபர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். அவர்களது பெயர் மற்றும் முகவரி தெரியாது. கைப்பற்றுதல் மகசர் சம்பவ இடத்தில் தயாரிக்கப்பட்டது. எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், கைப்பற்றுதல் மகசர் தயார் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்டு பின்னிட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Typewritten to my dictation in open
court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu